## 2040-ல் இந்தியர் நிலவில் கால் பதிப்பார்: சந்திரயான்-3 திட்ட இயக்குநர் வீரமுத்துவேல் நம்பிக்கை



உதகை தனியார் கல்லூரியில் நேற்று நடைபெற்ற ‘விண்வெளியில் இந்தியா’ என்ற கருத்தரங்கை குத்துவிளக்கேற்றித் தொடங்கிவைத்தார் சந்திரயான்-3 திட்ட இயக்குநர் வீரமுத்துவேல்.

**உதகை:** 2040-ம் ஆண்டுக்குள் இந்தியாசார்பில் மனிதனை நிலவுக்குஅனுப்பும் பணி நிறைவேற்றப்படும். 2040-ல் இந்தியர் நிலவில் கால் பதிப்பார் என்ற நம்பிக்கை உள்ளது என சந்திரயான்-3 திட்டஇயக்குநர் வீரமுத்துவேல் தெரிவித்தார்.

நீலகிரி மாவட்டம் உதகையில் உள்ள தனியார் கல்லூரியில் ‘விண்வெளியில் இந்தியா’ என்ற தலைப்பிலான கருத்தரங்கு நேற்று நடைபெற்றது.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் சந்திரயான்-3 திட்ட இயக்குநர் வீரமுத்துவேல் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, மாணவர்களுக்கு விண்வெளி குறித்தும், சந்திரயான் திட்டங்கள் குறித்தும் விளக்கினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஊரகப் பகுதிகளில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில்,

விண்வெளி மற்றும் சந்திரயான் திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளது.

இந்திய விண்வெளி ஆய்வுமையம் (இஸ்ரோ) சார்பில் ரிமோட்சென்சிங், தகவல் தொடர்பு, வானிலை, ஜிபிஆர்எஸ், வழிகாட்டி, கடலியல் குறித்து ஆய்வுசெய்யப்பட்டு வருகிறது. மேலும்,செவ்வாய் கிரகம், சூரியன் ஆகியவற்றை ஆய்வு செய்வதற்கான செயற்கைக்கோள்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

மேலும், அறிவியல் சார்ந்த செயற்கைக்கோள்களும் விண்ணுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் பெறப்படும் தகவல்கள், மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்துக்கு பயனுள்ளதாக இருக்கும்.

இந்தியா சார்பில் விண்வெளியில் ஆராய்ச்சி மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வரும் 2040-ம் ஆண்டுக்குள் இந்தியா சார்பில் மனிதனை நிலவுக்கு அனுப்பும் பணி நிறைவேற்றப்படும். 2040-ல் நிலவில் இந்தியர் கால் பதிப்பார் என்ற நம்பிக்கை உள்ளது.

சந்திரயான்-3 செயற்கைக்கோள் லேண்டர் மற்றும் ரோவர்அடங்கியது. இதன் ஆயுட்காலம்ஒரு லூனார் நாளாகும். அதன்ஆயுட்காலம் முடிவடைந்துவிட்டது. அந்த செயற்கைக்கோள் எந்த நோக்கத்துக்காக விண்ணில்செலுத்தப்பட்டதோ, அந்த நோக்கம் முழுமையாக நிறைவேறிஉள்ளது.

இந்த திட்டத்தில் பயன்படுத்தப்பட்ட ஆர்பிட்டர், நிலவின் சுற்றுவட்டப் பாதையிலிருந்து மீண்டும் பூமிக்கு வெற்றிகரமாக திரும்பக் கொண்டுவரப்பட்டது.

இவ்வாறு வீரமுத்துவேல் கூறினார்.

கருத்தரங்கில் நீலகிரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் கீதா மற்றும் பள்ளி மாணவ மாணவிகள், அரிமா சங்க நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

## “இந்திய விழுமியங்களைக் கொண்ட கல்வி முறை தேவை” - பிரதமர் மோடி வலியுறுத்தல்


பிரதமர் மோடி

**புதுடெல்லி:** இந்திய விழுமியங்களைக் கொண்ட கல்வி, காலத்தின் கட்டாயத் தேவை என்று பிரதமர் மோடி வலியுறுத்தியுள்ளார்.

சுவாமி தயானந்த சரஸ்வதியின் 200-வது பிறந்த நாளையொட்டி குஜராத் மாநிலம் மோர்பியின் தங்காராவில் உள்ள சுவாமி தயானந்தர் பிறந்த இடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி காணொலி மூலம் ஞாயிற்றுக்கிழமை உரையாற்றினார். அப்போது பேசிய அவர், "அந்த காலத்தில் இருந்த வழக்கங்களும், சமூகத் தீமைகளும் எவ்வாறு நம்மை பாதித்தன என்பதை நமக்குத் தெரிவித்தவர் தயானந்த சரஸ்வதி. நம்மிடம் இருந்த சமூக தீமைகள், நம்மை தாழ்ந்தவர்களாக சித்தரிப்பதற்கான ஒரு வழிமுறையாக பிரிட்டிஷ் அரசாங்கம் பயன்படுத்தியது. சிலர் சமூக மாற்றங்களைக் குறிப்பிட்டு பிரிட்டிஷ் ஆட்சியை நியாயப்படுத்தினர். சுவாமி தயானந்தரின் வருகை இந்தச் சதிகளுக்கு பலத்த அடி கொடுத்தது. சுவாமி தயானந்த சரஸ்வதி பெண்களுக்கு சம உரிமை வேண்டும் என்று வாதிட்டார்.

லாலா லஜபதி ராய், ராம் பிரசாத் பிஸ்மில், சுவாமி சிரத்தானந்தா போன்ற புரட்சியாளர்கள் ஆரிய சமாஜத்தால் தாக்கம் பெற்று உருவானார்கள். தயானந்தர் ஒரு வேத ஞானி மட்டுமல்ல; ஒரு தேசிய முனிவரும் கூட. அமிர்த காலத்தின் ஆரம்ப ஆண்டுகளில் சுவாமி தயானந்தரின் 200-வது ஆண்டு விழா வந்துள்ளது. இந்தியாவைப் பற்றி சுவாமிஜி வைத்திருந்த நம்பிக்கையை, நாம்

அமிர்த காலத்தின் மீதான தன்னம்பிக்கையாக மாற்ற வேண்டும். சுவாமி தயானந்தர் நவீனத்துவத்தின் ஆதரவாளராகவும், வழிகாட்டியாகவும் திகழ்ந்தார்.

இந்திய விழுமியங்களை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறை காலத்தின் தேவை. சுவாமிஜியின் தொலைநோக்குப் பார்வையை முன்னெடுத்துச் செல்லும் வகையில் தேசிய கல்விக் கொள்கை உள்ளது. ஆரிய சமாஜ் பள்ளிகள் இதற்கான மையங்களாக உள்ளன. தேசிய கல்விக் கொள்கையின் மூலம் நாடு இப்போது அதை விரிவுபடுத்துகிறது. இந்த முயற்சிகளுடன் சமூகத்தை இணைப்பது நமது பொறுப்பு". இவ்வாறு பிரதமர் பேசினார். மேலும் சுவாமி தயானந்த சரஸ்வதி பிறந்த குஜராத்தில் தானும் பிறந்திருப்பதை பெருமையாக கருதுவதாகவும் பிரதமர் தெரிவித்தார்

## போர்ட் பிளேர் வேலைவாய்ப்பு திருவிழா | 2,700 பேருக்கு பணி நியமன கடிதம்: பிரதமர் மோடி நாளை வழங்குகிறார்

**போர்ட் பிளேர்:** போர்ட் பிளேரில் நாளை நடைபெறும் வேலைவாய்ப்பு திருவிழாவில் பிரதமர் நரேந்திர மோடி காணொலி வாயிலாக கலந்துகொண்டு 2,700-க்கும் மேற்பட்டோருக்கு பணி நியமன கடிதங்களை வழங்க உள்ளார்.

மத்திய அரசின் பல்வேறு துறைகள், ஆயுதப் படைகள் மற்றும் பொதுத் துறை நிறுவ னங்களில் 10 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் மாபெரும் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி கடந்த 2022-ம் ஆண்டு அக்டோபரில் தொடங்கி வைத்தார்.

இதைத் தொடர்ந்து நாட்டின்பல்வேறு பகுதிகளில் ரோஜ்கார்மேளா எனப்படும் வேலைவாய்ப்பு திருவிழாக்கள் நடத்திஅரசுப் பணிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு பணி நியமனகடிதங்களை பிரதமரும் மத்திய அமைச்சர்களும் வழங்கி வருகின்றனர்.

அந்த வகையில் அந்தமான் நிகோபார் தலைநகர் போர்ட் பிளேரில் வேலைவாய்ப்பு திருவிழா நாளை (பிப்.12) நடைபெற உள்ளது.

இந்த விழாவில் பிரதமர் நரேந்திர மோடி காணொலி வாயிலாக கலந்துகொண்டு 2,721 பேருக்கு பணி நியமன கடிதங்களை வழங்க உள்ளார்.

இதுகுறித்து அதிகாரி ஒருவர் கூறும்போது, "போர்ட் பிளேர் நேதாஜி விளையாட்டு அரங்கில் விழா நடைபெற உள்ளது. உள்ளூர் நிர்வாகத்தில் 'குரூப் சி' பணிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு இந்த விழாவில் நியமன கடிதங்கள் வழங்கப்படும். மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை இணை அமைச்சர் சோம் பிரகாஷ் 3 நாள் பயணமாக அந்தமான் நிகோபார் தீவுகளுக்கு வந்துள்ளார். அவரும் துணை நிலை ஆளுர் டி.கே.ஜோஷியும் போர்ட் பிளேர் வேலைவாய்ப்பு திருவிழாவில் பங்கேற்பார்கள்" என்றார்.

## வெய்சன்ஹாஸ் செஸ் போட்டி: கார்ல்சன், டிங் லிரெனை வீழ்த்தினார் குகேஷ்




**வாங்கல்ஸ்:** ஜெர்மனியின் வாங்கல்ஸ் நகரில் வெய்சன்ஹாஸ் செஸ் போட்டி நடைபெற்று வருகிறது. இதன் தொடக்க நாளில் இந்திய கிராண்ட்மாஸ்டரான டி.குகேஷ் உலகின்முதல் நிலை வீரரான நார்வேயின் மேக்னஸ் கார்ல்சன், அர்மேனியாவின் லெவோன் அரோனியன், நடப்பு உலக சாம்பியனான சீனாவின் டிங் லிரென் ஆகியோரை தோற்கடித்தார். அதேவேளையில் பிரான்சின் அலிரெசா ஃபிரோசாவிடம் தோல்வி அடைந்தார்.

முதல் நாள் ஆட்டத்தின் முடிவில் டி.குகேஷ் 3 புள்ளிகளுடன் 2-வது இடத்தில் உள்ளார். ஜெர்மனியின் வின்செண்ட் கீமர் 3 வெற்றி, ஒரு டிராவுடன் 3.5 புள்ளிகளுடன் முதலிடத்தில் ஆதிக்கம்செலுத்துகிறார். உஸ்பெகிஸ்தானின் நோடிர்பெக் அப்துசட்டரோவ் 2 வெற்றி, 2 டிராவுடன் 3 புள்ளிகள் பெற்று 3-வது இடத்தில் உள்ளார்.

மேக்னஸ் கார்ல்சன், அலிரெசா ஃபிரோஸா, ஃபேபியானோ கருனாஆகியார் தலா 3 புள்ளிகளுடன் 4-வது இடத்தை பகிர்ந்து கொண்டுள்ளனர். டிங் லிரென் 4 ஆட்டங்களிலும் தோல்வி அடைந்து 8 பேர் கலந்துகொண்டுள்ள தொடரில் புள்ளிகள் ஏதும் இன்றி கடைசி இடத்தில் உள்ளார். லெவோன் அரோனியன் 3 தோல்வி, ஒரு டிராவுடன் 0.5 புள்ளிகள் பெற்று 7-வது இடத்தில் உள்ளார்.

## நடப்பு 2023-24 நிதியாண்டில் பி.எப். வட்டி 8.25% ஆக உயர்வு: மத்திய அறங்காவலர் வாரியம் பரிந்துரை




**புதுடெல்லி:** நடப்பு 2023-24 நிதியாண்டில் பி.எப். முதலீட்டுக்கான வட்டியை 8.25% ஆக உயர்த்த பி.எப். மத்திய அறங்காவலர் வாரியம் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

பணியாளர் வருங்கால வைப்புநிதிக்கான (பி.எப்.) வட்டி விகிதம்ஆண்டுதோறும் மாற்றி அமைக்கப்படுகிறது. பிஎப் அமைப்பின் முடிவு எடுக்கும் அமைப்பான மத்திய அறங்காவலர் வாரியம் (சிபிடி) இதற்கான பரிந்துரையை வழங்கும்.

அந்த வகையில், மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் பூபேந்திர யாதவ்தலைமையில் 235-வது மத்தியஅறங்காவலர் வாரிய கூட்டம் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்துக்குப் பிறகுதொழிலாளர் நலத் துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், ‘‘பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதி கணக்குகளில் குவிந்துள்ள முதலீட்டுக்கு நடப்பு 2023-24 நிதியாண்டில் வருடாந்திர வட்டியாக 8.25% வழங்க சிபிடி பரிந்துரை செய்துள்ளது. இதற்கு மத்திய நிதியமைச்சகம் ஒப்புதல் வழங்கிய பிறகு அரசிதழில் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடப்படும்’’ Zன கூறப்பட்டுள்ளது.

கடந்த 2020-21 நிதியாண்டில் பி.எப். முதலீட்டுக்கான வட்டியாக 8.5% வழங்கப்பட்டது. கரோனா ஊரடங்கு காரணமாக பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்பட்டதால், 2021-22 நிதியாண்டிக்கான வட்டி 40 ஆண்டுகளில் இல்லாத அளவாக 8.1% ஆக குறைக்கப்பட்டது. அதன் பிறகு 2022-23 நிதியாண்டுக்கான வட்டி 8.15% ஆக உயர்த்தப்பட்டது.

EVA ST